## மார்ச் - 18 - தவக்கால 5ம் ஞாயிறு
### "தமக்கென்றே வாழ்வோர் தம் வாழ்வை இழந்துவிடுவர்" யோவா.12:25

**முதல் வாசகம் : ஏரேமியா 31 : 31 – 34**

இதோ, நாள்கள் வருகின்றன. அப்பொழுது நான் இஸ்ரயேல் வீட்டாரோடும் யூதாவின் வீட்டாரோடும் புதிய உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்வேன், என்கிறார் ஆண்டவர். அவர்களுடைய மூதாதையரை எகிப்து நாட்டினின்று விடுவிப்பதற்காக, அவர்களை நான் கைப்பிடித்து நடத்தி வந்தபொழுது அவர்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையைப் போன்று இது இராது. நான் அவர்களின் தலைவராய் இருந்தும், என் உடன்படிக்கையை அவர்கள் மீறி விட்டார்கள், என்கிறார் ஆண்டவர். அந்நாள்களுக்குப் பிறகு, இஸ்ரயேல் வீட்டாரோடு நான் செய்யவிருக்கும் உடன்படிக்கை இதுவே: என் சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதிப்பேன் அதை அவர்களது இதயத்தில் எழுதிவைப்பேன். நான் அவர்களின் கடவுளாய் இருப்பேன் அவர்கள் என் மக்களாய் இருப்பார்கள், என்கிறார் ஆண்டவர். இனிமேல் எவரும் "ஆண்டவரை அறிந்துகொள்ளும்" எனத் தமக்கு அடுத்திருப்பவருக்கோ சகோதரருக்கோ கற்றுத்தர மாட்டார். ஏனெனில் அவர்களுள் பெரியோர் முதல் சிறியோர் வரை அனைவரும் என்னை அறிந்துகொள்வர், என்கிறார் ஆண்டவர். அவர்களது தீச்செயலை நான் மன்னித்துவிடுவேன் அவர்களுடைய பாவங்களை இனிமேல் நினைவு கூரமாட்டேன்.

**பதில்பாடல் :** கடவுளே தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்

**இரண்டாம் வாசகம் : ஏபிரேயர் 5 : 7 – 9**

சகோதர சகோதரிகளே! கடவுளும் அடையாளங்கள், அருஞ்செயல்கள், பல்வேறு வல்ல செயல்கள் மூலமாகவும், தம் திருவுளப்படி தூய ஆவியின் கொடைகளைப் பகிர்ந்தளித்ததன் மூலமாகவும் இதற்குச் சான்று பகர்ந்துள்ளார். வரவிருக்கும் உலகு பற்றிப் பேசுகிறோம். கடவுள் அதனை வானதூதரின் அதிகாரத்திற்குப் பணியச் செய்யவில்லை. இதற்குச் சான்றாக மறைநூலில் ஓரிடத்தில் சொல்லப்பட்டுள்ளது இதுவே "மனிதரை நீர் நினைவில் கொள்வதற்கு அவர்கள் யார்? மனிதப் பிறவிகளை நீர் ஒரு பொருட்டாக எண்ணுவதற்கு அவர்கள் எம்மாத்திரம்? ஆயினும் நீர் அவர்களை வானதூதரை விடச் சற்றே சிறியவர் ஆக்கியுள்ளீர் மாட்சியையும் மேன்மையையும் அவர்களுக்கு முடியாகச் சூட்டியுள்ளீர். உமது கை படைத்தவற்றுக்கு மேலாக அவர்களை நியமித்தீர். எல்லாவற்றையும் அவர்கள் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தியுள்ளீர். "அனைத்தையும் மனிதருக்கு அடிபணியச் செய்தார் என்பதால், எதையும் பணியாதிருக்க விட்டுவிடவில்லை எனலாம். எனினும், அனைத்தும் மனிதருக்கு இன்னும் அடிபணியக் காணோம். நாம் காண்பதோ சிறிது காலம் வானதூதரைவிடச் சற்றுத் தாழ்ந்தவராக்கப்பட்ட இயேசுவையே. இவர் துன்புற்று இறந்ததால், மாட்சியும் மாண்பும் இவருக்கு முடியாகச் சூட்டப்பட்டதைக் காண்கிறோம். இவ்வாறு கடவுளின் அருளால் அனைவருடைய நலனுக்காகவும் இவர் சாவுக்கு உட்பட வேண்டியிருந்தது. கடவுள் எல்லாவற்றையும் தமக்கென்று தாமே உண்டாக்கினார். அவர், மக்கள் பலரை மாட்சியில் பங்குகொள்ள அழைத்துச் செல்ல விரும்பியபோது, அவர்களது மீட்பைத் தொடங்கி வழி நடத்துபவரைத் துன்பங்கள் மூலம் நிறைவுள்ளவராக்கினார். இது ஏற்ற செயலே.

**நற்செய்தி : யோவான் 12 : 20 - 33**

அக்காலத்தில் வழிபாட்டுக்காகத் திருவிழாவுக்கு வந்தோருள் கிரேக்கர் சிலரும் இருந்தனர். இவர்கள் கலிலேயாவிலுள்ள பெத்சாய்தா ஊரைச் சேர்ந்த பிலிப்பிடம் வந்து, "ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம்" என்று கேட்டுக் கொண்டார்கள். பிலிப்பு அந்திரேயாவிடம் வந்து அதுபற்றிச் சொன்னார் அந்திரேயாவும் பிலிப்பும் இயேசுவிடம் சென்று அதைத் தெரிவித்தனர். இயேசு அவர்களைப் பார்த்து, "மானிட மகன் மாட்சி பெற வேண்டிய நேரம் வந்துவிட்டது. கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியா விட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். தமக்கென்றே வாழ்வோர் தம் வாழ்வை இழந்து விடுவர். இவ்வுலகில் தம் வாழ்வைப் பொருட்டாகக் கருதாதோர் நிலைவாழ்வுக்குத் தம்மை உரியவராக்குவர். எனக்குத் தொண்டு செய்வோர் என்னைப் பின்பற்றட்டும். நான் இருக்கும் இடத்தில் என் தொண்டரும் இருப்பர். எனக்குத் தொண்டு செய்வோருக்குத் தந்தை மதிப்பளிக்கிறார்" என்றார். மேலும் இயேசு, "இப்போது என் உள்ளம் கலக்கமுற்றுள்ளது. நான் என்ன சொல்வேன்? "தந்தையே, இந்த நேரத்திலிருந்து என்னைக் காப்பாற்றும்" என்பேனோ? இல்லை! இதற்காகத் தானே இந்நேரம்வரை வாழ்ந்திருக்கிறேன். தந்தையே, உம் பெயரை மாட்சிப்படுத்தும்" என்றார். அப்போது வானிலிருந்து ஒரு குரல், "மாட்சிப்படுத்தினேன் மீண்டும் மாட்சிப்படுத்துவேன்" என்று ஒலித்தது. அங்குக் கூட்டமாய் நின்று கொண்டிருந்த மக்கள் அதைக் கேட்டு, "அது இடிமுழக்கம்" என்றனர். வேறு சிலர், "அது வானதூதர் ஒருவர் அவரோடு பேசிய பேச்சு" என்றனர். இயேசு அவர்களைப் பார்த்து, "இக்குரல் என் பொருட்டு அல்ல, உங்கள் பொருட்டே ஒலித்தது. இப்போதே இவ்வுலகு தீர்ப்புக்குள்ளாகிறது இவ்வுலகின் தலைவன் வெளியே துரத்தப்படுவான். நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும் போது அனைவரையும் என்பால் ஈர்த்துக்கொள்வேன்" என்றார். தாம் எவ்வாறு இறக்கப்போகிறார் என்பதைக் குறிப்பிட்டே இப்படிச் சொன்னார்.

**தியானம்:** கடவுள் மனிதனை தனது சாயலிலும் உருவத்திலும் படைத்தார். (தொநூ.1:27) படைப்புக்கள் அனைத்தையும் நல்லதெனக்கண்ட கடவுள் (தொநூ.1:31) மனிதனையும் நல்லவனாகவே உருவாக்கினார். ஆனால் சாத்தானுடைய சோதனைக்கு வீழ்ந்த மனிதன் அவனுள் இருந்த அருள் தன்மையை இழந்து இருளுக்கு அடிமையாகிப்போனான். பாவத்தின் பயனாக இறப்புக்கு தன் வாழ்வை ஒப்புக்கொடுத்தான். ஆனால் கடவுள் நம்மீது கொண்ட பேரன்பு முடிவுறவில்லை, அவரது இரக்கம் தீர்ந்துபோகவில்லை. (புல.3:22) மனிதனுடைய இதயச் சிந்தனை எப்போதும் தீமையையே சிந்திப்பதை நினைத்து ஒரு பக்கம் மனம் வருந்திய கடவுள், தனக்காக வாழும் மனிதர்களை, மனுக்குலத்தில் இருந்து எழும்பச் செய்தார். கடவுள் தாம் தோந்துகொண்ட குலமுதல்வர்கள், நீதித்தலைவர்கள், இறைவாக்கினர்கள், அரசர்கள் இவர்கள் வழியாக தனக்காக தாகம் கொண்டு வாழும் மனுக்குலத்தை தயார் செய்தார். பத்துக் கட்டளைகளையும், நியமங்களையும், வழிமுறைகளையும் தான் தோந்துகொண்ட மக்கள் வழியாக மனுக்குலத்திற்கு கொடுத்து, வாழ்வுக்கான வழியை அவர்களுக்குக் காண்பித்தார். இறைவார்த்தையினால் அவர்களைக் கட்டியெழுப்பினார். நாம் வாழ்வு பெற வேண்டும் என்பதற்காக தனது ஒரே மகனையும் கடவுள் தியாகம் செய்தார். ஒன்றை இழக்காமல் மற்றதை பெறமுடியாது என்பதை நமக்குக் கற்றுக்கொடுத்து உலகம் வாழ்வுபெற நம் சுயநலன்களுக்கு, விருப்பு வெறுப்புகளுக்கு, நம்முடைய அடையாளங்களுக்கு, ஏன் நம்முடைய உயிரையுமே கடவுளுக்காக, கடவுளின் இறையாட்சிக்காக கொடுக்க அழைப்புவிடுக்கின்றார். இறுதிநாட்களில் மாந்தர் யாவர் மேலும் என் ஆவியைப் பொழிவேன் என்று யோவேல் இறைவாக்கினர் வழியாக முன்னுரைத்த கடவுள் இவ் இறுதி நாட்களில் நமக்கு தமது தூய ஆவியின் வல்லமையைக் கொடுத்து இந்த உலகத்தின் இருள்களை வெல்ல ஆற்றல் தருகின்றார். கடவுளின் ஆவியால் இயக்கப்படுகின்றவர்களே கடவுளின் மக்கள். (உரோ.8:14) என்பதை உணர்ந்தவர்களாய் நம் உள்ளங்களில் பொழியப்பட்டிருக்கும் தூய ஆவியின் துணையோடு (உரோ.15:30) இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாமல் நமது உள்ளங்கள் புதுப்பிக்கப்பெற்று கடவுளின் திருவுளம் எது எனத் தேர்ந்து தெளியவும், எது நல்லது, எது உகந்தது, எது நிறைவானது என்பதை உள்ளத்தில் உணர்ந்து செயல்படவும் (உரோ.12:2) நம்முடைய சுயநலன்களுக்கு இறந்து இயேசுவின் இலட்சியத்திற்கு உயிர்க்கவும் கடவுள் இன்று நம்மை அழைக்கின்றார்.